DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.6<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணகுமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.12.2022.

**முதல் விசாரணை:**

நான் உடுமலையில் கிருஷ்ணா கிளிக் சொந்தமாக வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 21.09.2018 அன்று சிகிச்சைக்காக முருகானந்தம் என்பவர் எனது கிளினிக்கு வந்தவரை சிகிச்சைக்கு அனுமதித்து அவரை பரிசோதித்ததில் அவர் ஏற்கனவே உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு வந்தது தெரிந்தது. அவருக்கு முகத்திலும், தலையிலும் தையல் போட்டிருந்தது. இடது முன்கையிலும், மோதிர விரல் மற்றும் சுண்டு விரலிலும் எலும்பு முறிவு காணப்பட்டது. பின்பு உடுமலை விநாயக மருத்துவமனையில் மேற்படி முருகானந்தத்தை அறுவை சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது மேற்படி முருகானந்தத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன் (**அந்த சான்று அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.அசா1 முருகானந்தம் எப்போது சிகிச்சைக்கு அரசு மருத்துவமனையில்

சேர்ந்து பின்பு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக நான் பார்த்த காயங்களை அரசு மருத்துவமனையில் பார்த்திருந்தால் அதற்கு அவர்கள் சிகிச்சை அளித்திருப்பார்கள் என்றால் அளித்திருப்பார்கள். மேற்படி முருகானந்தத்திற்கு ஏற்பட்ட காயம் அரசு மருத்துவமனையில் இருந்து வருவதற்கு முன்பு ஏற்பட்டதா அதன் பின்னிட்டு ஏற்பட்டதா என்பது என்னால் உறுதியாக கூறமுடியாது என்றால் சரிதான்.

2. அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மேற்படி கைகளில் ஏற்பட்ட வலி குறித்து குறிப்பிட்டிருந்தாலோ மருத்துவர்கள் பார்த்திருந்தாலோ மருத்துவர்கள் உரிய சிகிச்சை அளித்திருப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி அசா1 க்கு ஏற்பட்ட காயம்ஒரு நபர் பைக்கில் செல்லும்போது கல்குவியல் மீது பைக்குடன் விழுந்து கையில் அடிப்பட்டால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. அசா1 என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது எப்படி விபத்து நடந்தது எங்கு விபத்து நடந்தது எவ்வாறு நடந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் அவர் அடிதடி நடந்தது என்று மற்றும் குறிப்பிட்டார். ஒரு நபர் மூன்று நாட்கள் தனக்கு அடிப்பட்டு வலியோடு சிகிச்சை எடுக்காமல் இருக்க வாய்ப்பில்லை என்றால் வலி மாத்திரைகள் எடுத்துகொண்டு இருக்கலாம். மேற்படி சிசிக்சைக்கு சேர்ந்த நபர் மருந்து எடுத்துக்கொண்டதாக கூறவும் இல்லை நான் கேட்கவும் இல்லை.

3. சிகிச்சைக்கு என்னிடம் சேர்ந்த அசா1 அரசு மருத்துவமனையில் எடுத்துக்கொண்ட சிகிச்சை விவரம் சம்பந்தமான ஆவணம் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. அசா1 க்கு கைவிரல்களில் ஏற்பட்ட காயம் எத்தனை நாட்களுக்கு முன்னால் ஏற்பட்டது என்ற விவரம் குறித்து என்னால் சரியாக கூறமுடியாது என்றால் சரிதான்.